1969 செப்டம்பர் 12]

பார்க்கும்பொழுது, காடு மிகவும் குறைவாக இருப்பதால், அதிகமான நிலங்களைத் தனியாருக்கு விடுவது முறை இல்லை. விவசாயத்திற்குத் தகுந்த இடங்கள் இருப்பதாகத் தெரிவித்தால் கும்ரி சாகுபடிக்கு விடலாம்.

Radio Programmes

* 253 *Q.*—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether any study has been undertaken into the scheme of Community listening to radio programmes in this State?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இம்மாநிலத்தில் வானொலி நிகழ்ச்சிகளை மக்கள் சமுதாயத்தினர் கேட்கும் திட்டம் குறித்து ஆய்வு ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே, தற்பொழுது சென்னை, திருச்சி வானொலி நிலையங்களிலிருந்து ஒலிபரப்பப்படும் வர்த்தக ஒலிபரப்பு ஜனரஞ்சகமாக இருக்கிறது. ஆனால், சக்தி வாய்ந்த அலைகளினால் ஒலிபரப்பப் படாததினால், தொலை தூரங்களிலேயுள்ளவர்கள் சரியாகக் கேட்க முடியவில்லை. எனவே, சக்தி வாய்ந்த முறையில் ஒலிபரப்புவதற்கு மத்திய சர்க்காருக்கு யோசனை கூறுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இந்தக் கேள்வியின் மூலக் கருத்தானது, கிராம வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் வானொலி எந்த வகையில் பயன்படுகிறது என்பதைக் கொண்டது. அதற்கான குறிப்புரைகளின் அடிப்படையில், ஒவ்வொரு நாளும் 7½ மணி முதல் 8 மணி வரை திருச்சி வானொலி நிலையம் கிராம வளர்ச்சித் திட்டங்களைக் குறித்த நிகழ்ச்சிகளை மிகச் சிறப்பாக நடத்தி வருகிறார்கள்.

திரு. கொடவாசல் சி. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, இந்த வானொலி நிகழ்ச்சியில், விவசாயத்தைப் பொறுத்தவரையில், சட்ட சபை நிகழ்ச்சிகளும் இடம்பெறும் வகையில் மத்திய அரசுக்கு யோசனை கூறுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி, வானொலி நிகழ்ச்சி களைக் கிராம மக்கள் எந்த அளவுக்குக் கேட்கிறார்கள் என்பது பற்றியது.

திரு. இல. பலராமன் : தலைவரவர்களே, வானொலி நிலையத்தின் மூலமாகக் கிராம அபிவிருத்திக்கும், கிராம விவசாய உற்பத்திக்கும், கிராம விவசாயிகள் சங்கங்கள் மூலமாகக் கேட்கப் படும் கேள்விகளுக்கு வானொலி பதில் தருகின்றது. கிராம விவசாயிகள் சங்கம் தமிழ்நாடு பூராவும், எத்தனை இருக்கின்றன ? எத்தனை நல்லமுறையில் செயல்படுகின்றன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதற்கான முழுப் புள்ளி விவரம் இல்லை. என்னுடைய நினைவு சரியாக இருக்குமேயானால், 12,000 'ரூரல் ரேடியோ ஃபாரம்ஸ்' நல்லமுறையில் செயல்பட்டு வருவதாக அறிகிறேன்.

நகராட்சிகள்

* 254 வினா.—**திரு. என். எஸ். வி. சித்தன்** : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை நகரசபைத் தலைவர் அப்பதவியிலி லிருந்து நீக்கப்பட்டாரா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

* 255 வினா.—**திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் நகராட்சி நிர்வாகத்தின் மீது புகார் மனுக்கள் ஏதேனும் அண்மையில் அரசுக்கு வந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், அவற்றின் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

Corporation Council Elections

* 256 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether walls of a Corporation High School were demolished in connection with the location of voting booths for Madras Corporation Council elections in 1968?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஆம். எழு உயர்நிலை பள்ளிகளில்.

திருச்சிராப்பள்ளியில் புதைச் சாக்கடைத் திட்டம்

* 257 வினா.—**திரு. வை. சுவாமிநாதன்** : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—